III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. 297/2020

Deposition of witness for the Petitioners/PW2
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 12-07-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :C.Vinoth kumar | Caste | : |
| Father's Name | :Chandran | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk: | |

**பிரமாண பத்திரத்தின் தொடர்ச்சியாக முதல் விசாரணை/-**

நான் சென்னை பூந்தமல்லியை அடுத்துள்ள கண்ணப்பாளைளயத்தில் வசித்து வருகிறேன். எனது ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்கிறேன். (அது ம.த.சா.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

**இரண்டாம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இறந்தவரின் அண்ணன் ரோஹித் என்னை அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளவை பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல. நா்ன காவவ் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான்விபத்தை பார்த்தேன். சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்து காயம் பட்டவரை மருத்துவ மனைக்கு அழைத்து சென்ற பின்னர் நான் இறந்து போன திவாகரனின் அண்ணனான ரோஹித்துக்கு தகவல் தெரிவித்துவிட்டு கிளம்பிவிட்டேன். வண்டலூரிலிருந்து மீஞ்சூர் நோக்கி செல்லும் வெளி வட்ட சாலையின் காவல்சேரி அருகே உள்ள சங்கச்சாவடியை தாாண்டியுள்ள பயன்பாட்டு சாலையில் கண்டெய்னர் லாரியை எந்தவித சிக்னலும் இல்லாமல் வலது புறத்தில் அதன் ஓட்டுநர் நிறுத்திவிட்டு பக்கத்தில் எங்கேயோ

போய்விட்டார். அப்போது அந்த இடத்தில் டிராக்டர் வண்டலூர் புறத்திலிருந்து மீஞ்சூர் புறம் நோக்கி சென்று ெ காண்டிருந்தது. லாரி நிற்கிறதா அல்லது செல்கிறதா என்பது தெரியாமல் டிராக்டரின் ஓட்டுநர் அதன் மீது இடித்ததால் அதில் பயணம் செய்த திவாகர் தூக்கி எறிந்து அவர் கீழே விழுந்துவிட்டார். லாரி நீன்று கொண்டிருந்ததால் அந்த ஓட்டுநரின் மீது கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. லாரியின் பதிவு எண். டி என் 58 எ ஆர் 1262. டிராக்டரின் ஓட்டுநர் தானாக சென்று லாரியின் மீது மோதியதால் டிராக்டர் ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.